## கோபிசெட்டிபாளையம் நகராட்சி
## 31.12.2024 ந் தேதி நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள நகராட்சி பள்ளிகளில் முதலமைச்சர் காலை உணவுத்திட்டத்தில் பள்ளிகளின் மாணவ மாணவியர்களுக்கு Raja Shri Anbu Bhavan, Bus Stand Near, Gobichettipalayam ஒப்பந்ததாரர் மூலம் உணவு தயார் செய்து வழங்கப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட ஒப்பந்ததாரரின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 31.12.2024 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் முதலமைச்சர் காலை உணவுத்திட்டத்தில் நகராட்சி பள்ளிகளில் மாணவ மாணவியர்களுக்கு உணவு வழங்கும் பணி எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதால் இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.01.2025 முதல் 31.03.2025 ஆம் தேதி வரை மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்காகும் செலவினம் ரூ.3.50/- இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1088/2023/எச் 1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு : 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1044**

2. இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவின் பராமரிப்பில் உள்ள TN36 J2139 Frond End Loader வாகனத்தின் கிளட்ச் பிளேட், சுவர் அசெம்பளி போன்றவைகள் பழுதடைந்து உள்ளதாலும் வாகனம் 2022ஆம் ஆண்டு சர்வீஸ் செய்ததற்கு பிறகு தற்போது இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் தற்போது நான்கு புதிய டயர், டியூப்புகள், பொருத்திக் கொள்ளவும் அதற்க்கு ரூ.85,000/- ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதால் அச்செலவினத்திற்க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு : 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1045**

3. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுகாதாரப் பணிகளுக்கு தேவையான தளவாட சாமான்கள், பணிபாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் "Lemon Gross Oil" 30 லிட்டர் விநியோகம் செய்யும் பணிக்கு 19.11.2024 ஆம் தேதி ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனம் விபரம் | விபரம் | | | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் ( GST 18%) உட்பட |
|---|---|---|---|---|---|
| 1. | M/s. Sri.Athanur Amman Traders, 1/34 Kalappanaikan patti,Sendamanagalam, Namakkal Dt.637001. | 1 | மண்வெட்டி (கைபிடியுடன்) | ரூ.483/- | |
| | | 2 | கொத்து மண்வெட்டி | ரூ.225/- | |
| | | 3 | கதிர் அரிவாள் | ரூ.134/- | |
| | | 4 | குச்சியுடன் கூடிய டிச்சு தகடு பெரியது (ஒரு புறம் உள்ளது) | ரூ.395/- | |
| | | | ஜல்லி கரண்டி | ரூ.262/- | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 5 | | | ரூ. 13481/- |
| | | 6 | கை சீமாறு | ரூ.63/- | |
| | | 7 | மூங்கில் குச்சியுடன் சீமாறு | ரூ.325/- | |
| | | 8 | இரும்பு வாளி | ரூ.327/- | |
| | | 9 | அலுமினிய சட்டி | ரூ.584/- | |
| | | 10 | பூந்துடம்பம் | ரூ.342/- | |
| | | 11 | சிறிய மூங்கில் கூடை | ரூ.483/- | |
| | | 12 | பெரிய மூங்கில் கூடை | ரூ.625/- | |
| | | 13 | கடப்பாறை | ரூ.974/- | |
| | | 14 | சவுள் | ரூ.823/- | |
| | | 15 | கம்பூட்ஸ் | ரூ.655/- | |
| | | 16 | ஒளிரும் சட்டை | ரூ.344/- | |
| | | 17 | பிக்காஸ் | ரூ.926/- | |
| | | 18 | கைசுரண்டி (இரும்பு) | ரூ.134/- | |
| | | 19 | அரிவாள் | ரூ.687/- | |
| | | 20 | பல்லு கொக்கி பெரியது | ரூ.925/- | |
| | | 21 | பல்லு கொக்கி சிறியது | ரூ.807/- | |
| | | 22 | தலைக்கவசம் | ரூ.234/- | |
| | | 23 | லெமன் கிராஸ் ஆயில் GR – II லிட்டர் ஒன்றுக்கு | ரூ.2724/- | |

| **வ. எண்** | **நிறுவனம் விபரம்** | **விபரம்** | | | **ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ( GST 18%) உட்பட** |
|---|---|---|---|---|---|
| 1. | Sri Kaliamman Trading Corporation, 60/101/A1B R.S.Building,Kulakkarai Street, Namakkal Town | 1. | மண்வெட்டி (கைபிடியுடன்) | ரூ.480/- | ரூ. 13,374 /- |
| | | 2. | கொத்து மண்வெட்டி | ரூ.220/- | |
| | | 3. | கதிர் அரிவாள் | ரூ.130/ | |
| | | 4. | குச்சியுடன் கூடிய டிச்சு தகடு பெரியது (ஒரு புறம் உள்ளது) | ரூ.390/- | |
| | | 5. | ஜல்லி கரண்டி | ரூ.260/- | |
| | | 6. | கை சீமாறு | ரூ.60/- | |
| | | 7. | மூங்கில் குச்சியுடன் சீமாறு | ரூ.320/- | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 8. | இரும்பு வாளி | ரூ.320/- | |
| | | 9. | அலுமினிய சட்டி | ரூ.580/- | |
| | | 10. | பூந்துடம்பம் | ரூ.340/- | |
| | | 11. | சிறிய மூங்கில் கூடை | ரூ.480/- | |
| | | 12. | பெரிய மூங்கில் கூடை | ரூ.620/- | |
| | | 13. | கடப்பாறை | ரூ.970/- | |
| | | 14. | சவுள் | ரூ.820/- | |
| | | 15. | கம்பூட்ஸ் | ரூ.650/- | |
| | | 16. | ஒளிரும் சட்டை | ரூ.340/- | |
| | | 17. | பிக்காஸ் | ரூ.920/ | |
| | | 18. | கைசுரண்டி (இரும்பு) | ரூ.130/- | |
| | | 19. | அரிவாள் | ரூ.680/- | |
| | | 20. | பல்லு கொக்கி பெரியது | ரூ.920/- | |
| | | 21. | பல்லு கொக்கி சிறியது | ரூ.800/- | |
| | | 22. | தலைக்கவசம் | ரூ.230/- | |
| | | 23. | லெமன் கிராஸ் ஆயில் GR – II லிட்டர் ஒன்றுக்கு | ரூ.2714/ - | |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2- ல் Sri Kaliamman Trading Corporation, 60/101/A1B R.S.Building,Kulakkarai Street, Namakkal Town.- 638005என்பவரின் ஒப்பந்தபுள்ளி விலைவிகிதம்மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்தில் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1904/2024/எச்1)

**அலுவலக குறிப்பு : 1.** மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்

**அலுவலகக் குறிப்பு** : **1.அனுமதிக்கப்பட்டது. 2.ஏற்கப்பட்டது தீர்மான எண்.1046**

4. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பராமரிப்பில் உள்ள வாகனமான TN36 J2724 டிப்பர் வாகனத்தின் தகுதிச்சான்று புதுப்பித்து அவ்வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை செப்பனிட்டு வழங்கும் பணிக்கு 19.11.2024 ஆம் தேதி ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனம் விபரம் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s. Mettupalayam Auto Service Centre, 1 Raju Nagar, Soyampalayam,Tiruppur- 638001. | ரூ. 1,01,650/- + ( GST 18%) |
| 2. | M/s. Gandhi Motors,1K.k.Gardan, CM Nagar Road,Near KKSKLeather Factory Erode – 638005 | ரூ. 1,01,050 /- + ( GST 18%) |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2- ல் M/s. Gandhi Motors,1 K.k.Gardan,CM Nagar Road, Near KKSK Leather Factory Erode – 638005 என்பவரின் ஒப்பந்தபுள்ளி

விலைவிகிதம்மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்தில் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1904/2024/எச்1)

**அலுவலக குறிப்பு : 1.** மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு** : **1.அனுமதிக்கப்பட்டது 2.ஏற்கப்பட்டது தீர்மான எண்.1047**

5. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 9 நகராட்சி பள்ளிகளில் பள்ளிக் கழிவறைகள் மற்றும் பள்ளி வளாக தூய்மைப் பணிகள் M/s. Trustus Out Sourcing Solutions Pvt Ltd, Plot No. 117, D.No. 2, 28 th Street, Balaji Nagar, Chennai – 91 என்னும் நிறுவனத்தினரிடமிருந்து தினமும் 19 தூய்மைப் பணியாளர்களை வெளிக்கொணர்வு முறை மூலம் பெற்று மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 31.12.2024 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் மேற்குறிப்பிட்ட 9 நகராட்சி பள்ளிகளில் தூய்மைப் பணிகள் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், பள்ளி மாணவர்களின் பொது சுகாதார நலன் கருதியும், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.01.2025 முதல் 45 பள்ளி வேலை நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிடம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 631/– என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தினமும் 19 தூய்மைப் பணியாளர்களை தொடர்ந்து பெற்று பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ.5.40/– இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1830/2024/எச்1 )

**அலுவலக குறிப்பு : 1.** மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை கல்வி நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு** : **1. மற்றும் 2.அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1048**

6. இந்நகராட்சியின் உயிரி எரிவாயு கூடத்தில் (Bio – Gas Plant) பழம் மற்றும் மாமிசக் கழிவுகளை அரைத்து அதன் Liquid னை Bio – Digestor Tank ல் ஏற்ற பயன்படுத்தப்படும் Sewage Sucking மோட்டாரில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய 13.11.2024 ஆம் தேதியன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு,

| வ. எண் | நிறுவனம் விபரம் | விலைப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | அபிராமி எலக்ட்ரிகல்ஸ், 34/231A சத்தி மெயின்ரோடு,கரட்டடிபாளையம் கோபிசெட்டிபாளையம் 638 453 | ரூ 9855/– |
| 2 | மாருதி ஏஜென்சீஸ்,26 ஜவஹர்லால் நேரு வீதி,ஈரோடு மெயின்ரோடு, கரட்டூர், கோபிசெட்டிபாளையம் 63847 | ரூ.9955/– |
| 3 | ஸ்ரீ வாரி எலக்ட்ரிகல்ஸ்,கரட்டூர் ரோடு, பச்சைமலை, பாரதிவித்யாலயா பள்ளி அருகில், கோபிசெட்டிபாளையம் 638 476 | ரூ. 9757/– |

வரப்பெற்ற விலைப்புள்ளி விகிதங்களில் வரிசை எண். 3–ல் குறிப்பிடப்பட்டுள்ள ஸ்ரீவாரி எலக்ட்ரிகல்ஸ், கரட்டூர் ரோடு, பச்சைமலை, பாரதிவித்யாலயா அருகில், கோபிசெட்டிபாளையம் 638 476 என்பவரின் விலைப்புள்ளி விலைவிகிதம் மற்ற இரண்டையும் விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்கலாம். (ந.க.எண். 1904/2018 /எச்1)

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு** : **1. அனுமதிக்கப்பட்டது 2. ஏற்கப்பட்டது தீர்மான எண்.1049**

7. இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவின் பராமரிப்பில் உள்ள TN 36 AA 4564 கழிவு நீர் வாகனத்திற்கு 2020ம் ஆண்டு புதிய பேட்டரி பொருத்தப்பட்டு நான்கு ஆண்டுகள் கடந்த நிலையில் பேட்டரி மிகவும் பழுதடைந்து திறன் குறைந்து விட்டதால், வாகனத்திற்கு பழைய பேட்டரியை எடுத்துக் கொண்டு புதிய பேட்டரி பொருத்திக் கொள்ள ஆகும் உத்தே செலவினத் தொகை ரூ.6,300/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1982/2024/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு** : **1. மற்றும் 2.அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1050**

8. இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவின் பராமரிப்பில் உள்ள TN 36 J 2139 Frond End Loader வாகனத்தின் பக்கெட், ஏற்றி இறக்கும் ஹைட்ராலிக் பைப் மற்றும் அதனை சார்ந்த பட்டா, காலர், பின் போன்ற பொருட்கள் மிகவும் பழுதடைந்து இயக்கமுடியாத நிலை உள்ளதால், ரூ.15,000/-ம் உத்தேச செவினத்தில் பழுதுகளை சரிசெய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1982/2024/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு** : **1. மற்றும் 2.அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1051**

9. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள 30 வார்டு பகுதிகளிலும் டெங்கு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட அபேட் மருந்து தெளித்தல், கொசுப்புழுக்களை அழித்தல், புகை மருந்து தெளித்தல், நோய் பரவும் விதம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் M/s. L.D. Man Power Solutions, Vellore 638 602 என்னும் நிறுவனத்தினரிடம் தினமும் 37 கொசுபுழு தடுப்பு பணியாளர்களை (DBC Workers) பெற்று மேற்கொள்ளப்பட்டு வரும் நோய்த் தடுப்பு பணியின் ஒப்பந்தகாலம் 31.12.2024 ஆம் தேதியுடன் முடிவடைவதால், நகரின் பொதுசுகாதார நலன் கருதியும், நோய் தடுப்பு பணிகளின் அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.01.2025 முதல் 31.01.2025 முடிய ஒருமாத காலத்திற்கு ஒப்பந்த காலத்தினை காலநீட்டிப்பு செய்து கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.562/- என்னும் விலை விகிதத்தில் தொடர்ந்து அந்நிறுவனத்தினரிடமிருந்து கொசுபுழு தடுப்பு பணியாளர்களை பெற்று நோய் தடுப்பு பணிகளை நல்ல முறையில் மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.6.45/- இலட்சத்திற்க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1018/2024/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு** : **1. மற்றும் 2.அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1052**

10. இந்நகராட்சிக்குட்பட்ட தலைமை சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள ஆற்று நீரேற்றும் 120 HP மோட்டார் பம்புக்கு மின் சப்ளை வரும் (3Phase. 3 pole, 400 A) மெயின் சுவிட்சு பழுதாகி உள்ளது. எனவே மோட்டாரை தொடர்ந்து இயக்க முடியாத நிலையில் உள்ளது. ஒரே மோட்டார் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது. ஆகவே 120HP மோட்டார் no.II ற்க்கு மெயின் சுவிட்சு புதியாக மாற்றுவதற்கு மதிப்பீடு தொகை ரூ.65,100/- ஆகும். குடிநீர் அவசர அவசியம் கருதி மெயின் சுவிட்சு மாற்றி மோட்டார் இயக்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு (ந.க.எண்.1361/2024/இ1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

**அலுவலகக் குறிப்பு** : **1. மற்றும் 2.அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1053**

11. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள அறிவு சார் மையம் மற்றும் நூலகத்திற்கு மின்தடை ஏற்படும் காலங்களில் சீராக மின்சாரம் கிடைக்க 62.5 KVA ஜெனரேட்டரை இயக்குவதற்கு 1 மணி நேரத்திற்கு 14 லிட்டர் டீசல் தேவைப்படுகிறது. மாதம் 1 முறை தமிழ்நாடு மின்சார வாரியம்

சார்பில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள (EB Shuntdown) சுமார் 6 மணி நேரம் நிறுத்தப்படுகிறது. 6 மணி நேரத்திற்கு 84 லிட்டர் டீசல் தேவைப்படுகிறது. 1 வருடத்திற்கு 1008 லிட்டர் தேவைப்படுகிறது. 1 லிட்டர் டீசல் ரூ. 100/- வீதம் 1008 லிட்டர்க்கு ரூ.1,00,800 /- ஆகும். மேற்கண்ட பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு ( ந.க.எண்.1361/2024/இ1 )

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கான செலவினம் கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.

**அலுவலகக் குறிப்பு** : **1. மற்றும் 2.அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1054**

12. நகராட்சிக்கு சொந்தமான IUDP வாரசந்தை கடை எண்கள். 22,23,24,25 மற்றும் 26 (வரி விதிப்பு எண்கள்.057/551, 057/552, 057/553, 057/554, 057/555) கொண்ட கடைக்கு கடந்த 2016 ல் வாடகை மறு நிர்ணயம் செய்து திரு.கே.பி தனபால், திரு.எம்.கே. நாராயணசாமி, திரு.எம்.கே. ஆறுமுகம், திரு.வி.எம். மெய்யப்பன், திரு.வி.எம். மெய்யப்பன் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

வருவாய் ஆய்வாளர் அவர்கள் தனது 14.11.2024ம் தேதிய குறிப்பில், மேற்கண்ட IUDP வாரசந்தை கடை எண்.22,23,24,25 மற்றும் 26ன் குத்தகைதாரர்கள் 2016ல் வாடகை உயர்வு செய்ததை எதிர்த்து கோபிசெட்டிபாளையம் மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

அரசாணை நிலை எண் (81) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கள் துறை ந.நி.5 (2) துறை நாள்.13.06.2024ல் கோபிசெட்டிபாளையம் நகராட்சி தீர்மானம் எண். 469, நாள். 26.12.2016 மற்றும் 501 நாள்.27.05.2016 ஆகியவற்றினை ரத்து செய்து அரசு முதன்மை செயலாளர் அவர்களால் உத்திரவிடப்பட்டது.

மேற்படி வழக்கில் அரசாணையின் படி வழக்கு எண்கள் 27/2017, 28/2017 மற்றும் 48/2017 கோபிசெட்டிபாளையம் மாவட்ட உரிமையியல் நடுவர் நீதி மன்றம் அவர்களால் மேற்படி வழக்கு 09.08.2024 அன்று நகராட்சிக்கு சாதகமாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை தொடர்ந்து நகராட்சி வழக்கறிஞர் அவர்களின் அறிவுரையின் படி மேற்கண்ட கடையின் குத்தகைதாரர்களுக்கு நிலுவை வாடகைத் தொகை செலுத்தக் கோரி அறிவிப்பு வழங்கப்பட்டது, மேற்படி குத்தகைதாரர்கள் நிலுவை வாடகை செலுத்தாமலும் நீதிமன்ற தீப்பாணையை மதிக்காமலும் தன்னிச்சையாக கடையினை அவர்களே பூட்டி முறையே சாவியை ஒப்படைக்காமல் கடையினை என்னால் தொடர்ந்து நடத்த முடியாது அதனால் இந்நகராட்சி நிர்வாகமே எடுத்துக் கொள்ளட்டும் என கடிதம் அனுப்பியுள்ளனர், மேற்படி கடைகள் பூட்டப்பட்ட நிலையிலேயே உள்ளது.

எனவே IUDP வாரசந்தை கடை எண். 22,23,24,25 மற்றும் 26 ஆகிய கடைகளை பூட்டி சீல் வைத்து நகராட்சி வசம் எடுத்துக் கொண்டு 30.10.2024ந் தேதியுடன் மேற்படி நபர்களுக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தை ரத்து செய்து 01.11.2024 முதல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர தெரிவித்துள்ளார்.

எனவே வருவாய் ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி, IUDP வாரசந்தை கடை எண். 22,23,24,25 மற்றும் 26 (வரி விதிப்பு எண். 057/551, 057/552, 057/553, 057/554, 057/555 ) கடைக்கு திரு.கே.பி தனபால், திரு.எம்.கே. நாராயணசாமி, திரு.எம்.கே. ஆறுமுகம், திரு.வி.எம். மெய்யப்பன், திரு.வி.எம். மெய்யப்பன் என்பவர்களுக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை 30.10.2024 ஆம் தேதியுடன் ரத்து செய்யவும், 01.11.2024 ஆம் தேதி முதல் மேற்படி கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 3060/2016/அ3 )

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலகக் குறிப்பு** : **அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1055**

13. இந்நகராட்சி கரட்டூர் வளமீட்பு மையத்தில் தினமும் சேகரித்து வைக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் கழிவுகள் மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு அரியலூர் Ultra Tech, Dalmia சிமெண்ட் ஆலைகளுக்கும், Trichy Dalmia Cement ஆலைக்கும் சரக்கு ஏற்றி செல்லும் லாரிகள் மூலம் அனுப்பி வைத்திட வாடகைக்கு அமர்த்தும் முறையில் லாரிகளை விநியோகம் செய்யும் பணி 04.09.2024 ஆம் தேதி

முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 04.09.2024 ம் தேதி முதல் கீழ்காணும் விபரப்படி பிளாஸ்டிக் கழிவுகள் சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

| மாதம் | அனுப்பி வைக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளின் அளவு |
|---|---|
| செப்டம்பர் 2024 | 145.905 MT |
| அக்டோபர் 2024 | 64.020 MT |
| மொத்தம் | 209.925 MT |

இப்பணிக்கு சரக்கு ஏற்றி செல்லும் லாரிகளை விநியோகம் செய்யும் ஒப்பந்ததாரரான M/S. Explosive Enter Prises, Gobichettipalayam அவர்களிடம் அக்டோபர் 2024 ஆம் மாதம் வரை தொடர்ந்து லாரிகளை பெற்று இப்பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இப்பணிக்கு ரூ. 3.50 இலட்சத்திற்கு ஏற்கனவே மன்றம் அனுமதி வழங்கிய நிலையில் நாளது தேதி வரை அனுமதிக்கப்பட்ட தொகை செலவிடப்பட்டு ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்க வேண்டி உள்ளது. இந்நிலையில் எதிர்வரும் 31.12.2024 ஆம் தேதி வரை இப்பணியினை மேற்கொள்ள ரூ.1.50 இலட்சம் ஆகும் என மதிப்பிடப்படுகிறது. எனவே இப்பணிக்கு சரக்கு ஏற்றிச்செல்லும் லாரிகளை இப்பணிக்கான ஒப்பந்ததாரரிடம் 08.11.2024 ம் தேதியிலிருந்து தொடர்ந்து பெற்று தேக்கமின்றி சிமெண்ட் ஆலைக்கு அனுப்பி வைக்கும் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 08.11.2024 ஆம் தேதியிலிருந்து தொடர்ந்து லாரிகளை பெற்று இப்பணியினை மேற்கொண்டு வருவதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு : 1. அனுமதிக்கப்பட்டது 2.ஏற்கப்பட்டதுதீர்மான எண்.1056**

14. தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0) ன் கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் GFC – Star Rating 3 Star மற்றும் ODF ++ என்ற அங்கீகாரத்தை ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளையும் ஆய்வு செய்து வழங்கி வருகின்றனர். எனவே, கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு Garbage Free City 3 Star மற்றும் ODF ++ ஆகிய இரண்டு தரச்சான்றுகளையும் பெறுவதற்கு விண்ணப்பித்து தரச்சான்றினை பெறுவதற்கு பொது மக்களின் ஆட்சேபனை மற்றும் கருத்துக்களை பெறுவதற்காக தினத்தந்தி தினசரி நாளிதழில் 06.11.2024 ஆம் தேதியன்று அறிவிப்பு விளம்பரம் தினசரி தினத்தந்தி நாளிதழில் செய்யப்பட்டுள்ளது. எனவே, M/s. The Daily Thandhi, 16, Nachiyappa Street, Erode – 638001 மூலம் விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ.9639/–ஐ வழங்க வேண்டி பட்டியல் பெறப்பட்டுள்ளது. இத்தொகையினை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
( ந.க.எண். 1904/2018 /எச்1)

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது மற்றும் வருவாய் மூலதன நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு : 1. மற்றும் 2.அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1057**

15. இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனம் பழைய பேருந்து நிலைய வணிக வளாகத்தில் உள்ள நகராட்சி மிதிவண்டி நிலையத்தில் கட்டணம் வசூல் செய்வதற்கான உரிமம் எதிர்வரும் 30.10.2024 உடன் மூன்றாண்டு குத்தகை உரிம காலம் முடிவடைந்த நிலையில் நகராட்சி பொறியாளர் அவர்களின் குறிப்பில் பழைய பேருந்து நிலைய வணிக வளாக கட்டிடம் இடிக்கப்பட்டு புதிதாக கட்டிடம் கட்ட மதிப்பீடு தயார் செய்து பிரேரணைகள் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பித்து TUFIDCO APPRAISAL முடிக்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டதால் மேலும், 01.11.2024 முதல் 31.12.2024 வரை இரண்டு மாதங்களுக்கு ஏற்கனவே உள்ள குத்தகைதாரர்களுக்கு உரிமம் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டது. தற்போது உதவி வருவாய் அலுவலர் அவர்களின் 09.12.2024 ஆம் தேதிய குறிப்பில் தற்போதைய உரிம நீட்டிப்பு காலம் முடிவடைவதால் மேற்படி குத்தகைதாரர் விண்ணப்பத்தின் பேரில் 01.01.2025 முதல் 31.03.2025

வரை மேலும் மூன்று மாதங்களுக்கு உரிம காலத்தை நகர்மன்றத்தின் அனுமதி பெற்று நீட்டிப்பு செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே உதவி வருவாய் அலுவலர் அவர்களின் குறிப்பின் படி மேற்படி பழைய பேருந்து நிலைய வணிக வளாகத்தில் உள்ள மிதிவண்டி நிலையத்திற்கான குத்தகை உரிமத்தினை 01.01.2025 முதல் 31.03.2025 வரை மேலும் மூன்று மாதங்களுக்கு மட்டும் நிபந்தனையுடன் குத்தகை உரிமத்தினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ((ந.க.எண். 2560/2024/அ3)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு** : **அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1058**

16. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை வணிக வளாகத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் தினசரி சந்தை வணிக வளாக IUDM கடைகளுக்கு 19.11.2024 ஆம் தேதியன்று முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடை பெற்ற கடைகள் :

1. தினசரி சந்தை IUDM கடை எண். A.03, A.06, A.08, A.11, A.20, G.1 மற்றும் கடை எண். G.2 (7 கடைகள்)

மேற்படி 7 கடைகளுக்கு நடைபெற்ற முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில், ஏலம் கோர யாரும் முன்வரவில்லை. ஒரே ஒரு கடைக்கு மட்டும் இரண்டு நபர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டனர். விபரம் பின்வருமாறு.

| வ. எண் | கடையின் விபரம் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | தினசரி சந்தை IUDM கடை எண். **A.20** | திருமதி.எஸ். சௌந்தர்யா 11,கண்ணன் கோவில் வீதி, திருப்பூர் | **ரூ.15,100/-** |
| | | திருமதி.ரேவதி, 223,ராஜன் நகர் மொடச்சூர் கோபிசெட்டிபாளையம் 638452 | ரூ.15200/- |

மேற்கண்ட விபரங்களின் படி,

வரிசை எண். 1 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A.20 க்கு, திருமதி.எஸ். சௌந்தர்யா என்பவர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.15,100/- ஐ விட கூடுதலாக ரூ.100/- சேர்த்து திருமதி.ரேவதி என்பவர் ரூ.15,250/- க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை குறிப்பிட்டுள்ளார்,

உதவி வருவாய் அலுவலர் அவர்கள் தனது 21.11.2024 ஆம் தேதிய குறிப்பில், தினசரி சந்தை IUDM கடை எண். A.20 கொண்ட கடைக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.15,200/- குறிப்பிட்டுள்ள திருமதி. ரேவதி என்பவருக்கு மன்றத்தின் அனுமதி பெற்று, கட்டுமான பணிகள் முடிவடைந்தபின் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே உதவி வருவாய் அலுவலர் அவர்கள் குறிப்பின்படி, தினசரி சந்தை IUDM கடை எண். A.20 கொண்ட கடைக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.15,200/- குறிப்பிட்டுள்ள திருமதி. ரேவதி என்பவருக்கு தினசரி வணிக வளாக கட்டுமான பணிகள் முடிவடைந்தபின், ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கவும், ஏலம் போகாத மீதமுள்ள ஆறு கடைகளுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1272/2023/அ3)

**அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**அலுவலகக் குறிப்பு** : **அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1059**

17. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான வாரசந்தை காலியிடத்தல் உள்ள மீன் கடைகளுக்கு சுங்கம் வசூல் செய்யும் உரிமம் 12.04.2022 முதல் 11.04.2025 வரை மூன்று ஆண்டுகளுக்கு திருமதி.எஸ். சித்ராதேவி என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டிருந்தது.

மேற்படி குத்தகை காலம் 11.04.2025 உடன் முடிவடைவதால் ஒப்படைக்கு நாள் முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1060**

18. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான மொடச்சூர் வாரசந்தையில் உள்ள நவீன ஆடுவதை சாலையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 05.12.2024 ஆம் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்கண்ட குத்தகை இனத்திற்கு ஏலம் கோர யாரும் முன்வரவில்லை. பின்வரும் விபரப்படி மூன்று நபர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டனர்.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி கோரிய ஆண்டு குத்தகை தொகை |
|---|---|---|
| 1 | திரு. பி.வி. வெள்ளியங்கிரி, த/பெ. வேலப்ப கவுண்டர் 63, தங்கமணி எக்ஸ்டென்சன், கோபிசெட்டிபாளையம் 638 476, 9842397279 | ரூ.45044/- |
| 2 | திரு.என். கே.இளங்கோவன், த/பெ. குழந்தைவேலு 11ஏ சீதாலட்சுமி புரம், 6 வது வீதி கோபிசெட்டிபாளையம், 638476.9443385646 | ரூ.40,203/- |
| 3 | திருமதி. செல்லம்மாள்க/பெ. பி.வி. வெள்ளியங்கிரி 63, தங்கமணி எக்ஸ்டென்சன்,கோபிசெட்டிபாளையம் | ரூ.39,500/- |

மேற்கண்ட விபரப்படி மூன்று நபர்கள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் திரு. பி,வி. வெள்ளியங்கிரி என்பவர் ரூ.45,044/-க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை கோரியுள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது, கடந்த 2024-2025 ஆம் ஆண்டு குத்தகை தொகை ரூ.40,058/- ஐ விட ரூ.4986/- கூடுதலாகவும், கடந்த மூன்றாண்டு சராசரி குத்தகை தொகை ரூ.38,180/-ஐ விட ரூ.6864/- கூடுதலாகவும் உள்ளது.

வருவாய் ஆய்வர் தனது 05.12.2024 ஆம் தேதிய குறிப்பில், முந்தைய வாரச்சந்தை குத்தகைதாரரின் குத்தகை உரிமம் 31.12.2024 ஆம் தேதியுடன் முடிவடைவதால், வாரச்சந்தையில் உள்ள ஆடுவதைசாலையில் சுங்கம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ரூ.45044/-க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு. பி.வி. வெள்ளியங்கிரி என்பவருக்கு 01.01.2025 முதல் 31.12.2027 முடிய மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி வாரசந்தையில் உள்ள ஆடுவதைச் சாலையில் சுங்கம் வசூல் செய்யும் உரிமத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.45,044/- கோரியுள்ள திரு. பி.வி. வெள்ளியங்கிரித/பெ. வேலப்ப கவுண்டர் என்பவருக்கு 01.01.2025 முதல் 31.12.2027 முடிய மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது, (ந.க.எண். 2560/2023/அ3 )

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலகக் குறிப்பு : 1. அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1061**

19. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 15இல் தூய்மை இந்தியா திட்டம் (2.0) -ன் கீழ் I & D கட்டுமான பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. இந்தப்பணிக்கு கீரிப்பள்ளம் ஓடையில் நடுவே தடுப்புச்சுவர் கட்டுப்பட்டுள்ளது. இப்பகுதியில் கனமழையின் காரணமாக அதிக அளவில் மழைநீர் வரும்பொழுது அவசர காலங்களில் Shutter மூலமாக திறந்து மழைநீரை வெளியேற்ற வேண்டும் என்பதால், இதற்கு Shutter அமைக்க உத்தேச மதிப்பீட்டு செலவினம் தொகை ரூ.7.79

இலட்சம் ஆகும். எனவே, அச்செலவின தொகையினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்,
2. மேற்காண் செலவின தொகை ரூ.7.79 இலட்சத்தினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு** : **1. மற்றும் 2.அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1062**

20. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13இல் தினசரி சந்தை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் தளத்தில் வாகனம் நிறுத்துமிடம் உள்ளது. இப்பகுதிக்கு வாகனங்கள் செல்ல சரிவுபாதை (Ramp) அமைக்க வேண்டியுள்ளது. இதற்கு Ramp (சரிவு பாதை) II Reach மற்றும் அடித்தளத்தில் தண்ணீர் (மழைநீர்) புகா வண்ணம் மேற்கூரை அமைக்க உத்தேச மதிப்பீட்டு செலவினம் தொகை ரூ.39.00 இலட்சம் ஆகும். எனவே, அச்செலவின தொகையினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்,
2. மேற்காண் செலவின தொகை ரூ.39.00 இலட்சத்தினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3. அரசு மானியம் பெற நடவடிக்கையில் உள்ளது. அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு** : **நீக்கப்பட்டது தீர்மான எண்.1063**

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் பொது மக்கள் பயன்படுத்தும் வகையில்

1. பேருந்து நிலையம் 500 LPH Ro Plant
2. தாய்சேய் நல விடுதி 250 LPH Ro Plant
3. அம்மா உணவகம் 250 LPH Ro Plant
4. நகராட்சி அலுவலகம் 250 LPH Ro Plant

ஆகிய இடங்களில் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் சுத்திகரிப்பு கருவி மூலம் சுத்திகரிக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி சுத்திகரிப்பு இயந்திரத்தினை தனியார் சேவை மூலம் 2024-2025ஆம் ஆண்டு பராமரிப்பு செய்திட ஆகும் செலவினம் ரூ,1,50,000/-க்கு மற்றும் அதன் உதிரி பாகங்கள் மதிப்பீட்டு விலை விகிதத்தில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதினை சரி செய்து கொள்ளவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/-க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்,
2. மேற்காண் செலவின தொகையினை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு** : **1. மற்றும் 2.அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1064**

22. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2024-2025ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 22.11.2024 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண் 5, ராமர் எக்ஸ்டன்சன் 5ம் தெருவில் உள்ள சிறுமின் விசை பம்பு HDPE Tank மேடை புதியதாக அமைக்கும் பணி | 35,000 | M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர் | –0.55% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s தங்கராஜீ ஒப்பந்ததாரர் | 0.08% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2 | இந்நகராட்சிக்கு சொந்தமான 1.ஜெயராம் நடுநிலைப்பள்ளி 2.நகராட்சி நடுநிலைப்பள்ளி(டவுன்) 3.வேங்கமையார் நகராட்சி துவக்கப்பள்ளிகளில் புதியதாக குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் வினியோகம் செய்து பொருத்தும் பணி | 1,20,000 | M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர் | 0.30 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| | | | M/s.மாருதி இன்ஞ்னியரிங் ஒப்பந்ததாரர் | 0.07 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிகளில் வ.எண் 1 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
3. மேற்படி பணிகளில் வ.எண் 2 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு. மாருதி இன்ஞ்னியரிங் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
4. மேற்படி பணிக்கு உத்திரவு கடிதம் வழங்கியதை மன்றம் ஏற்க்கலாம்

**அலுவலகக் குறிப்பு : 1. அனுமதிக்கப்பட்டது 2,3,மற்றும் 4.ஏற்கப்பட்டது தீர்மான எண்.1065**

23. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2024–2025 இல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 12.11.2024 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் வார்டு எண் 1 முதல் 10 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் குழாய் உடைப்பு மற்றும் குடிநீர் வினியோகம் மேம்பாடு செய்யும் பணிக்காக சாலையில் தோண்டப்பட்ட குழிகளை சீரமைக்கும் பணி, மற்றும் தார் சாலையில் ஏற்பட்டுள்ள பழுதுகளை தார் பேச் மூலம் சீரமைக்கும் பணி | 10,00,000 | M/s R.S Infra Constructions | –0.02 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s R.Muthusamy & Co | 0.88 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் வார்டு எண் 11 முதல் 20 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் குழாய் உடைப்பு மற்றும் குடிநீர் வினியோகம் மேம்பாடு செய்யும் பணிக்காக சாலையில் தோண்டப்பட்ட குழிகளை சீரமைக்கும் பணி, மற்றும் தார் சாலையில் ஏற்பட்டுள்ள பழுதுகளை தார் பேச் மூலம் சீரமைக்கும் பணி | 10,00,000 | M/s R.S Infra Constructions | –0.02 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s R.Muthusamy & Co | 0.88 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 3 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் வார்டு எண் 21 முதல் 30 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் குழாய் உடைப்பு மற்றும் குடிநீர் வினியோகம் மேம்பாடு செய்யும் பணிக்காக சாலையில் தோண்டப்பட்ட குழிகளை சீரமைக்கும் பணி, மற்றும் தார் சாலையில் ஏற்பட்டுள்ள பழுதுகளை தார் பேச் மூலம் சீரமைக்கும் பணி | 10,00,000 | M/s R.S Infra Constructions | –0.02 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s R.Muthusamy & Co | 0.88 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு: 1.** மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிகளில் வ.எண் 1 ,2 , 3 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s R.S Infra Constructions அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
3. மேற்படி பணிக்கு உத்திரவு கடிதம் வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு : 1. அனுமதிக்கப்பட்டது 2 மற்றும் 3.ஏற்கப்பட்டது தீர்மான எண்.1066**

24. இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட பகுதியில் அமைந்துள்ள மரக்கிளைகளை அகற்றும் பணிக்கு 28.10.2024 இல் ஏலம் கோரியதில் கீழ்க்கண்டவாறு நபர்கள் விலை விகிதம் அளித்துள்ளனர். மதிப்பீட்டு தொகை ரூ.400

| வ. எண் | கிராமம் | புல எண் | வகைபாடு | மர வகை | மரங்களின் எண்ணிக்கை | கிளைகளின் எண்ணிக்கை | சுற்றளவு | உயரம் | மதிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | லக்கம் பட்டி | வார்டு பி, பிளாக் 4 நகரளவை எண் 76 | ச. புற | புளிய மரம் | 2 | 4 | 1 மீட்டர் (கிளை ஒன்று) | 25 அடி | 400 |

ஏலத்தில் கலந்து கொண்ட நபரின் விவரம்

| வ.எண் | ஏலம் கோருபவர் பெயர் | ஏலத்தொகை |
|---|---|---|
| 1 | திரு.பி.மகுடேஸ்வரன் த/பெ.பழனிசாமி | 860 |
| 2 | திரு.சி.ரமேஷ் த/பெ. சித்த மூப்பன் | 725 |

**அலுவலகக் குறிப்பு: 1.** மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** மேற்படி பணிக்கு அதிக ஏல விலை விகிதம் அளித்துள்ள திரு.பி.மகுடேஸ்வரன் த/பெ.பழனிசாமி அவர்களின் விலை புள்ளியினை ஏற்கலாம்.

3.மேற்படி பணிக்கு உத்திரவு கடிதம் வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு : 1.அனுமதிக்கப்பட்டது 2, 3, ஏற்கப்பட்டது தீர்மான எண்.1067**

25. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13இல் தினசரி சந்தை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் தளத்தில் வாகனம் நிறுத்துமிடம் உள்ளது. இப்பகுதிக்கு வாகனங்கள் செல்ல சாலையில் இருந்து சரிவுபாதை (Ramp) அமைக்க வேண்டியுள்ளது. இதற்கு சாலையில் இருந்து பகுதி வரை Ramp சரிவு பாதை (I Reach) உத்தேச மதிப்பிட்டு செலவினம் தொகை ரூ.39.00 இலட்சம் ஆகும். எனவே, அச்செலவின தொகையினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்,

2. மேற்காண் செலவின தொகை ரூ.39.00 இலட்சத்தினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3. அரசு மானியமாக பெற Proposal அனுப்பப்பட்டுள்ளது நடவடிக்கையில் உள்ளது. அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு : நீக்கப்பட்டது தீர்மான எண்.1068**

26. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பொறியியல் பிரிவில் பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பணிகளை கவனிக்க நகராட்சி உதவி பொறியாளர் மற்றும் பொதுப்பணிமேற்பார்வையாளர் ஆகிய இருவர் மட்டுமே உள்ளார்கள். மேலும், அரசாணை எண். 10 நாள்.23.01.2023 நகராட்சி பொறியாளர் நிலை II – 1, உதவி பொறியாளர்/இளநிலை பொறியாளர் – 2, பொதுப் பணி மேற்பார்வையாளர் – 2, பட வரைவாளர் நிலை III – 1, பணி ஆய்வாளர் – 4, மின் கண்காணிப்பாளர் நிலை II – 1, குழாய் பொருத்துனர் நிலை I – 1, ஆகிய 12 எண்ணிக்கை பதவிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தற்போது அம்ரூத் 2.0 15வது நிதிக்குழு மானியம் நமக்கு நாமே திட்டம் மற்றும் தூய்மை இந்தியா திட்டம் 2.0 போன்ற திட்டப்பணிகள் நடைபெற்று வருவதாலும், திட்ட பணிகளுக்கு திட்ட பிரேரணைகள் தயாரித்து அரசுக்கு கருத்துரு அனுப்ப வேண்டியுள்ளதாலும், அன்றாட பணிகளை கவனிக்க வேண்டியுள்ளதாலும், அலுவலகத்தில் ஆட்கள் பற்றாக்குறை காரணத்தினாலும் மூன்று மாதங்களுக்கு இரண்டு பணி ஆய்வாளர்களை ஒப்பந்த அடிப்படையில் மூன்று மாதத்திற்கு (ஜனவரி 2025 முதல் மார்ச் 2025 வரை) பணியமர்த்திக் கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.70,000/–ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1069**

27. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான கடைகள் அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 03.07.2007ன் படி ஒன்பது ஆண்டுகள் குத்தகை உரிமகாலம் முடிவடையும் கடைகளுக்கு அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையில் வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டு குத்தகைக்கு விடப்பட வேண்டும். அதன்படி 31.03.2017ஆம் தேதியுடன் ஒன்பது ஆண்டுகள் முடிவடையும் கடைகளுக்கு நகர்மன்ற தீர்மான எண்.22, நாள். 30.04.2018ன் படி 01.04.2017ஆம் தேதி முதல் அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையில் வாடகை மறு நிர்ணயம் செய்து வழங்கப்பட்டது.

தற்போது இந்நகராட்சியின் உதவி வருவாய் அலுவலர் அவர்களின் 18.11.2024 ம் தேதிய குறிப்பில் மேற்படி அரசாணையின் படி IUDP பழைய லாரி நிலைய கடை எண்கள் 3ஏ. 4,5,6,7 மற்றும் 11ன் குத்தகைதாரர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின கண்காணிப்பு குழுவானது ந.க.எண்.1842/2024/அ3, நாள்.23.3.2018ல் வாடகை மறு நிர்ணயம் செய்து

வழங்கியுள்ளது, அதன்அடிப்படையில் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.22, நாள்.31.03.2018ல் கீழ்கண்ட கடை குத்தகைதாரர்களுக்கு மாதம் ரூ.7000/- என வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி 01.04.2017 முதல் மாத வாடகை ரூ.7000/- என வாடகை நிர்ணயம் செய்து வாடகை தொகையை செலுத்த அறிவிப்பு வழங்குவதற்கு மாறாக ரூ.8000/- என தவறுதலாக அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனால் வாடகை முரணாக இருப்பதாலும் 01.04.2018 ல் அறிவிப்பு வழங்கிவிட்டு 01.04,2017 முதல் முன் தேதியிட்டு வாடகை செலுத்தக் கோரியதற்கு எதிராக கீழ்கண்ட கடை குத்தகைதார்கள் கோபிசெட்டிபாளையம் மாவட்ட உரிமையியல் நடுவர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். மேற்படி வழக்கு தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் 07.11.2024 அன்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஆஜராக பட்ட நிலையில் மேற்படி கடை குத்தகைதாரர்களுக்கு மன்றத்தால் ஒப்புதல் வழங்கப்பட்ட வாடகை ரூ 7000/- ன் அடிப்படையில் அறிவிப்பு வழங்கி அதன் நகலை வழங்குமாறு இந்நகராட்சி வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது. அதன்படி குத்தகைதாரர்களுக்கு ரூ7000/- ன் அடிப்படையில் மாத வாடகை கணக்கிட்டு அறிவிப்பு வழங்கப்பட்டது, மேலும் மேற்படி தீர்மானத்தின் படி 01.04.2017 முதல் ரூ.8000/- என தவறுதலாக கேட்பு எழுப்பப்பட்டதை 01.4.2017 முதல் ரூ.7000/- என கணக்கீடு செய்து நிலுவை கேட்பு பதிவேட்டில் மன்றத்தின் அனுமதி பெற்று திருத்தம் செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

| வ. எண் | குத்தகை தாரர் பெயர் | திரு.ஏ.பி. கண்ணு சாமி | திரு. பி.சண் முகம் | திரு. என். சிவக்கு மார் | திரு,என், சாந்த்பாஷா | திரு.வி. நாகேஸ் வரன் | திரு.டி.எ ஸ். சிதம்பரம் | திரு.கே..எம். நாராயணசாமி |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| வரி விதிப்பு எண் | | 057/ 589 | 057/ 590 | 057/ 591 | 057/ 592 | 057/ 593 | 057/ 594 | 057/ 597 |
| நிதியாண்டு | | | | | | | | |
| 1 | 2017-2018 | 0 | 0 | 0 | 2444 | 0 | 0 | 0 |
| 2 | 2018-2019 | 0 | 0 | 0 | 26400 | 0 | 0 | 0 |
| 3 | 2019-2020 | 0 | 0 | 0 | 26400 | 0 | 0 | 0 |
| 4 | 2020-2021 | 0 | 78600 | 0 | 13800 | 0 | 8594 | 33469 |
| 5 | 2021-2022 | 37757 | 13800 | 36600 | 13800 | 32374 | 83806 | 110400 |
| 6 | 2022-2023 | 68443 | 13800 | 0 | 13800 | 73826 | 13800 | 76789 |
| 7 | 2023-2024 | 15840 | 15840 | 0 | 15840 | 15840 | 15840 | 15840 |
| மொத்தம் | | **122040** | **122040** | **36600** | **112484** | **122040** | **122040** | **236498** |
| | | | | | | | பெரு மொத்தம் | **873742** |

எனவே உதவி வருவாய் அலுவலர் அவர்களின் குறிப்பின்படி, மேற்கண்ட கடை குத்தகைதாரர்களுக்கு 01.04.2017 முதல் 31.03.2024 வரை மேற்படி பட்டியலில் கண்டுள்ளபடி அந்தந்த வரிவிதிப்புகளுக்கு தவறுதலாக எழுப்பப்பட்ட நிலுவை கேட்பு தொகை மொத்தம் ரூ. **873742/-** ஐ நீக்கம் செய்வதற்கும், நடப்பு 2024-2025 ம் ஆண்டிற்கு 01.04.2024 முதல் மேற்படி

கடைகளுக்கான மாத வாடகை ரூ.7000/- என்ற அடிப்படையில் திருத்தம் செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1070**

28. நகராட்சிக்கு சொந்தமான MUDF பழைய பேருந்து நிலையம் கடை எண்.30 வரி விதிப்பு எண். (057/846) கடைக்கு திரு, என்.டி. பழனிச்சாமி த/பெ.தங்கவேல் என்பவருக்கு 01.04.2023 முதல் 31.03.2026 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. திரு, என்,டி, பழனிச்சாமி என்பவர் தனது 04.11.2024 ம் தேதிய மனுவில் தன்னால் மேற்படி கடையினை தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தினால், மேற்படி கடையினை 30.10.2024 ஆம் தேதியுடன் நகராட்சி வசம் திரும்ப ஒப்படைப்பு செய்வதாக தெரிவித்துள்ளார்.

வருவாய் ஆய்வாளர் அவர்கள் தனது 13.11.2024 ஆம் தேதிய குறிப்பில், மேற்படி கடையினை 13.11.2024 முதல் நகராட்சி வசம் எடுத்துக் கொண்டு நகர்மன்றத்தின் அனுமதி பெற்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், மேலும் நவம்பர் 2024 முதல் கேட்பினை நீக்கம் செய்யலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே வருவாய் ஆய்வர் அவர்கள் குறிப்பின்படி, திரு, என்,டி, பழனிச்சாமி த/பெ.தங்கவேல் என்பவருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை அக்டோபர் 2024 ஆம் தேதியுடன் ரத்து செய்யவும், 01.11.2024 ஆம் தேதி முதல் மேற்படி கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 3060/2017/அ3

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1071**

29. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் ந.க.எண்.2452/2023/பி1 நாள் 04.12.2024- கடிதத்தில் "14420" இலவச தொலைபேசி மையத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்குரிய ஆண்டு செலவினத்தொகையில் ரூ.49,602/-ஐ இந்நகராட்சியின் மூலம் MENTER INFOCOMM நிறுவனத்திற்கு செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இத்தொகையினை செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1993/2024/எச்1)

**அலுவலக குறிப்பு : 1.** மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு : 1. மற்றும் 2.அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1072**

30. இந்நகராட்சி பகுதியில் உள்ள 30 வார்டுகளில் தினமும் சேகரமாகும் பிளாஸ்டிக் மற்றும் எரியும் தன்மையுடைய கழிவுகள் (சிமெண்ட் ஆலைகளின் மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு உகந்த) அனைத்தும் இந்நகராட்சியின் RRC மையங்களில் சேமித்து வைத்து அக்கழிவுகள் அவ்வப்போது தேக்கமின்றி திடக்கழிவு, பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 -ன் படி சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்ப வேண்டி உள்ளது. எனவே லாரிகளை வாடகைக்கு விநியோகம் செய்யும் ஒப்பந்ததாரர் மூலம் இப்பணியினை 01.01.2025 முதல் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.00/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1152/2024/எச்1)

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுசுகாதார பிரிவினரால் திடக்கழிவு மற்றும் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 -ன் படி வசூலிக்கப்படும் அபராத கட்டணங்களின் தொகை அல்லது திடக்கழிவு பயனீட்டாளர் கட்டணத்திலிருந்து (Solid Waste Management User Charge) செலவு செய்து கொள்ளவும், அத்தொகையில் இருப்பு இல்லாத நேர்வில் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு : 1. மற்றும் 2.அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1073**

31. இந்நகராட்சியின் நுண்உரமாக்கல் மையத்தில் பொருத்தப்பட்டுள்ள அரைக்கும் இயந்திரத்தில் பழுது ஏற்பட்டதால் 6 புதிய போல்ட் நட்டுகள் Concrete Bed-ல் துளையிட்டு பொருத்தியும் சிமெண்ட்

கான்கீரிட் கொண்டு 2'x4' சைசில் பெட் அமைத்தும் Shreading Machine Box–ல் வெல்டிங் செய்தும் சைடு கம்பிகளை 4 இடங்களில் வெல்டிங் செய்தும் அரைக்கும் கத்திகள் உள்ள பகுதியில் சைடு இரும்பு பட்டா மாற்றியும் பேரிங்குகள் புதியது பொருத்தியும் 8'x2' சைசில் புள்ளி கடைந்து பேரிங்கில் பொருத்தியும் MCC'sக்கான வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்ததாரரான M/S.சஞ்சய் எலக்ட்ரிகல்ஸ், கோபிசெட்டிபாளையம் அவர்களால் இப்பணி மேற்கொள்ளப்பட்டது. இதற்கான தொகை ரூ– 27.860/– ஐ அவருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.1982/2024/எச்1)

**அலுவலக குறிப்பு : 1.** மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு** : **1. மற்றும் 2.அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1074**

32. இந்நகராட்சி பஸ்நிலையத்தில் தினமும் உருவாகும் குப்பை கழிவுகளை தரம் பிரித்து சேகரிக்கும் பணிக்கு இரு சக்கரம் பொருத்தப்பட்ட பிளாஸ்டிக்கால் ஆன குப்பை டப்பாக்கள் 4 எண்ணம் வாங்கி கொள்ள ஆகும் செலவினம் ரூ.25,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
( ந.க.எண்.1993/2024/எச்1)

**அலுவலக குறிப்பு : 1.** மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு** : **1. மற்றும் 2.அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1075**

33. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.29766/2021/எச்1, நாள். 03.12.2024ல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, 07.12.2024 மற்றும் 08.12.2024 ஆகிய இரு தினங்களில் தூய்மைப் பணியில் ஈடுபடும் பணியாளர்கள் 222 பேருக்கும் இந்திய மருத்துவ சங்கம் IMA மற்றும் ABI SK மருத்துவனை இணைந்து மாபெரும் மருத்துவமுகாம் நடைபெற்றது. இம்முகாமிற்கு தேவையான சாமியானா பந்தல், சேர், கார்பெட், அமைத்தது, மைக்செட் அமைத்தது, டீ,காபி, ஸ்நாக்ஸ், வழங்கியது, பிளக்ஸ் பெயர் பலகைகள், பிளக்ஸ் போர்டுகள் அமைத்தது, அனைவருக்கும் மதிய உணவு வழங்கியது, போட்டோகிராபி, போட்டோ Spiral Binding மற்றும் முகாம் சார்ந்த இதர செலவினங்கள் மேற்கொண்ட வகையில் மொத்தம் ரூ.65,860/– இந்நகராட்சி துப்புரவு ஆய்வர் திரு.பி.கே.சௌந்தரராஜன் அவர்களால் செலவிடப்பட்டு அதற்கான செலவின அசல் ரசீதுகள் சமர்ப்பித்துள்ளதால் அவருக்கு அத்தொகையினை திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1982/2024/எச்1)

**அலுவலக குறிப்பு : 1.** மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு** : **1. மற்றும் 2.அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1076**

34. 26.08.2024 ஆம் நாளில் சக்திநகர் பொது மக்களால் நகர் மன்ற தலைவருக்கு வைக்கப்பட்ட கோரிக்கையின் மீது நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்:

கோபிசெட்டிபாயைம் நகராட்சி நிர்வகத்திற்குட்பட்ட லக்கம்பட்டி கிராமம், Old Survey No. 105/1 & 97, Ward–A, Block–1, T.S.No.52/2 & 60 என்ற எண் உடைய நிலத்தில் 22 மீ x 5மீ (70 அடி × 30 அடி) அளவுடைய தார்சாலையாக உள்ள வழித்தடத்தை கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக பொதுமக்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். இந்த இடத்தை வாடகைக்கு விடுவதற்காகக் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள "சொத்து விபரத்தில்" தெரியப்படுத்தியுள்ள "சக்தி நகர்", 1996–ல் அமைக்கப்பட்ட போது அதற்கான நகராட்சி அனுமதி வரைபடத்திலும் (Layout எண் 4/94 F2) இந்த வழித்தடம் காட்டப்பட்டுள்ளது. இதனை நம்பித்தான் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் கட்டப்பட்டு கடந்த 25 ஆண்டுகளாக தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றனர்.

அது மட்டுமின்றி, இந்த வழித்தடத்தைச் சுற்றி அமைந்துள்ள,தமிழ்நகர், என்.பி.சி. நகர், வேலுமணி நகர், ஆசிரியிர் நகர், பூரணி நகர், கலைஞர் நகர். ஆஞ்சநேயர் நகர், மின் நகர் ஆகிய பகுதிகளைச் சார்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் கோபியில் முதன்மைச் சாலைக்குச் செல்லாமலேயே, போக்குவரத்து

இடையூறு இல்லாமல், அரசு மருத்துவமனை, வாய்க்கால் சாலை மற்றும் பள்ளிகளுக்குச் சென்று வருவதற்கான வாய்ப்பாக இருந்து வருகின்றது.

இந்த வழித்தடத்தை தற்போது AGOT OF TAMILNADU வழிகாட்டுதலின்படி குத்தகைக்கு எடுத்துள்ள திரு.முருகேசன் என்பவர் கம்பி வேலி அமைத்து தடுத்துள்ளார். இந்த வழித்தடம் அடைக்கப்படுவதால் ஆயிரக்கமாக்கான மக்கள் துன்ப துயரங்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள். இந்த இடம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பயன்படும் வகையில் மேற்கண்ட AGOT நிர்வாகம் தெரிவிக்கும் அனைத்து நிபந்தனைகளையும் பொதுமக்கள் வழிமுறைகளை ஏற்று நடக்கவும் தயாராக உள்ளார்கள். எனவே AGOT–யின் கட்டுப்பாட்டில் உள்ள அந்த வழித்தடத்தை கோபி நகராட்சி நிர்வாகம் நீண்டகால குத்தகை அடிப்படையில் எடுத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1543/2024/எப்1)

**அலுவலக் குறிப்பு :** மன்றம் முடிவு செய்யலாம்.

**அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1077**

35. இந்நகராட்சி பகுதிகளில் மனித கழிவுகளை மனிதர்களே கைகளால் அகற்றும் பணியாளர்கள் குறித்த கணக்கெடுப்பு சம்பந்தமாக பொது மக்களின் ஆட்சேபனை இருப்பின் அதனை பெறுவதற்கு 22.12.2024 ஆம் தேதியன்று தினகரன், தினத்தந்தி ஆகிய இரு தினசரி பத்திரிக்கைகளில் அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. இவ்விளம்பரம் தினகரன் நாளிதழில் வெளியிட்டமைக்கு ரூ.5355/– னை KAL Publication Pvt.Ltd நிறுவனத்திற்கும் தினத்தந்தி நாளிதழில் வெளியிட்டமைக்கு ரூ.5355/– னை Daily Thandhi அவர்களுக்கு வழங்க வேண்டி பட்டியல் பெறப்பபட்டுள்ளது. மேற்படி தொகையினை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. ( ந.க.எண். 1904/2018 /எச்1 )

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது மற்றும் வருவாய் மூலதன நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு: 1. மற்றும் 2.அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1078**

36. இந்நகராட்சிக்கு உட்பட்ட 30 வார்டுகளில் உள்ள சோடியம் ஆவி விளக்குகள் 470 nos உள்ளது. இதில் 360 sv விளக்குகள் மாற்றம் செய்ய நகர்மன்றத்தின் வாயிலாக அனுமதி பெறப்பட்டு M/s Sehell Coergy Equiments அவர்களிடம் விலை புள்ளி பெறப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர், நகராட்சி இயக்குநரகம் சென்னை அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. பண்டிகை காலத்தை முன்னிட்டு அவசர அவசியம் கருதி 100 லைட்டுகள் (90W) மாற்றப்பட்டு நல்ல முறையில் எரிந்து கொண்டு உள்ளது. மேலும் 100 லைட்டுகள் மாற்றி எரியவிடுவதற்கு மதிப்பீட்டுத்தொகை ரூ.11,20,980/– ஆகும் . 90W LED லைட்டுகள் பொருத்த மன்றத்தின் ஒப்புதலுக்க

**அலுவலகக் குறிப்பு;** 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. பொது நிதியில் பணியை மேற்கொள்ளலாம்

**அலுவலகக் குறிப்பு : 1. மற்றும் 2.அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1048**

(ஒப்பம்) என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி